[2010 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவல்கள் உண்மையாக இருக்கும்பட்சத்தில், அவற்றை இன்றே ஆராய்ந்து, நாளை நடக்கவிருக்கின்ற எனது மானியக் கோரிக்கையில், ஒரு நல்ல பதிலை எதிர்பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

மாணவர் விடுதி

***59523—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.*

திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட அயர்லாந்தில் பிறந்து, இலண்டனில் படித்து, இந்தியாவிற்கு வந்து, ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் தமிழுக்காக தொண்டாற்றிய ஐயா கால்டுவெல் அவர்கள் வாழ்ந்து மறைந்த*

2010 ஏப்ரல் 20]

ஊர் இடையான்குடி. அவர் வாழ்ந்து மறைந்த இல்லத்தை, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அரசு நினைவு இல்லமாக அறிவித்து, அதற்கு 18 இலட்சம் ரூபாய் நிதியையும் ஒதுக்கிக்கொடுத்து, அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் அந்த நினைவு இல்லம் திறக்கப்படவேண்டுமென்ற எங்களுடைய பகுதி மக்களுடைய ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐயா கால்டுவெல் ஆரம்பித்த ஒரு ஆரம்பப் பள்ளி, ஒரு நடுநிலைப் பள்ளி, கால்டுவெல் நூற்றாண்டு ஞாபகர்த்த மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 1,500 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தப் பகுதியில் கல்வி நிறுவனங்களை நடத்துகிற தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவர்கள் இரண்டு இல்லங்களை வைத்திருக்கிறார்கள். மாணவர்களிடம் ஓரளவிற்குக் கட்டணம் வசூல் செய்து அந்த விடுதிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக, வசதி குறைந்த மாணவ, மாணவிகள் வந்து படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு புதிய பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதியை அந்த ஊரில் இந்த ஆண்டே ஆரம்பித்துத் தர நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே புதிதாக மாணவர் விடுதிகள் அமைப்பதற்கு அனுமதியில்லை. அனுமதி வழங்குகிற நேரத்தில் அந்தப் பகுதியினுடைய தன்மைக்கேற்றாற்போல மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

[2010 ஏப்ரல் 20

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு புதிதாக விடுதிகள் ஆரம்பிக்கும்பட்சத்தில், அங்கே ஆரம்பித்துத் தருவதாக உறுதி அளித்திருக்கின்றார்கள். இன்னொன்றையும் நான் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். அவ்வாறு நீங்கள் புதிய விடுதி அமைக்க, நிதி தருவீர்களானால், அதற்குரிய இடமும் இலவசமாக தென்னிந்திய திருச்சபையினுடைய பேராலயத்திலிருந்து தருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்து, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துகின்ற இந்த நன்னாளில் தமிழுக்குத் தொண்டாற்றிய கால்டுவெல் அவர்கள் வாழ்ந்து மறைந்த இல்லத்தின் அருகில் ஒரு மாணவர் விடுதியைச் சிறப்பு நிகழ்வாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம். அந்த ஆர்வம் குறையாமல் இருப்பதற்கு வேண்டிய பணிகளை இந்த அரசாங்கம் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

66—

புதுப்பித்தல்

***61323—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், அறப்பளீஸ்வரர் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?